# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,247 — 1936 ம் ௵ ஐப்பசி௴ 2 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய சட்டம்.

நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய 1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின் 5 ந்தாம் 6 ம் பிரிவுகளின்படி முல்லைத்தீவு டிஸ்திறிக்கைச் சேர்ந்த சுகாதார சங்கத்தாரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

எம். எவ். டீ எஸ். ஜயறத்தின,
அக்கிராசனர்.

முல்லைத்தீவு கச்சேரி,
1936 ம் ஆண்டு புரட்டாதி௴ 29 ந் ௳.

உபவிதிகள்.

1. முல்லைத்தீவு டிஸ்திறிக்கைச்சேர்ந்த எந்தச் சுகாதார சங்கப் பட்டணத்து எல்லைக்குள் நிற்கும் ஒவ்வொரு ஆண் நாய்க்கும், பெண் நாய்க்கும் அந்த நாயை வைத்திருப்பவர் பதிவுப பணமாக 25 சதமும் 50 சதமும் முறையே வருஷவீதம் கட்டுதல்வேண்டும். இந்த உபவிதியின் நோக்கத்திற்காக ஒரு வருஷம் என்பது சித்திரை௴ 1 ந் திகதி தொடக்கம் அடுத்த வருஷம் பங்குனி௴ 31 ந் திகதி வரைக்கும் உள்ள காலம் எனக் கணக்கிடப்படும்.

2. அப்பட்டணத்திற்குள் நாய் நிற்கும் வீட்டிற் கதிகாரியாயுள்ள ஒவ்வொருவரும் அந்தந்த வருஷத்தில் தை௴ 31 ந் திகதிக்குமுன் சுகாதார சங்கத்தாரின் அக்கிராசனரால் நியமிக்கப்பட்ட வரியறவிடுபவரிடம் தம்மிடத்திலுள்ள ஆண் அல்லது பெண் நாயை குறிதத விவரங்கள் இத்துடன் அணைக்கப்பட்டிருக்கும் "A" என்னும் அடையாளமிடப்பட்ட பத்திரத்திலே நிரப்பிக்கொடுத்தல் வேண்டும்.

3. "B" என்னும் அடையாளமிடப்பட்ட சேட்டிவிக்கட் பத்திரமொன்று பதிவுப் பணம் பெற்றவுடனே குறித்த வரி அறவிடுபவரால் அல்லது சுகாதார சங்கத்தாரின் கந்தோரில் கொடுக்கப்படும்.

4. (1) (*a*) தனது அபிப்பிராயப்படி ஒரு ஆண் அல்லது பெண நாய மிகவும் நோய்பட்டதாயும் அதைப் பிடித்திருக்கும் நோய் மறு நாய்களுக்குத் தொத்தக்கூடியதாயும் இருக்குமாகில், அல்லது

(*b*) வயது முதிர்ந்து நோய்வாய்ப்பட்டு அல்லது ஊறடைந்து இருப்பதனால அது உயிரோடு இருப்பது நன்றனறு என்பதாகக் காணப்படுமாகில் வரி அறவிடும் உத்தியோகஸ்தர் பதிவு சேட்டிவிக்கேற் பத்திரம் கொடுக்க மறுக்லாம்.

(2) அல்லது வரி அறவிடும் உத்தியோகஸ்தர் நாயின் நிலைகுத் தக்க நிபந்தனைகளோடு சேட்டிவிக்கேற் பத்திரங்கொடுக்கலாம். இங்ஙனம் கொடுக்கவில்லைஎன்றேனும் ஏதாவதுநிபந்தனைகள்விதித்தாரென்றேனும் எவராவது திருப்தியீனப்பட்டால் அவர் சுகாதாரச் சங்கத்தாரின் அக்கிராசனரிடம் அப்பீல் முறையீடு செய்துகொள்ளலாம். அவ்வக்கிராசனர் அதை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம், அல்லது அழித்துவிடலாம்.

(5) ஒவ்வொரு பதிவுச் சேட்டிவிக்கேற் பத்திரத்திலும் பின்வரும் நிபநதனைகள் அச்சிடப்பட்டிருக்கும், அவையாவன :—

(*a*) குறித்த நாய் மிகவும் நோய்பிடித்திருப்பதால் அல்லது அங்கவீனப் பட்டிருப்பதால் அது உயிரோடிருப்பது நல்லதல்லவென்று அக்கிராசனர் கணடால்,

(*b*) சொந்தக்காரன் அந்த நாயைக்கொடுமையாக நடத்துகிறதாக அல்லது கவனியாதுவிடுகிறதாக அக்கிராசனர் கண்டால்,

(*c*) குறித்த நாய் தொத்து வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிறபோது சொந்தக்காரன் அதை மற்றும் நாய்களோடு ஊடாடித் திரிய விட்டால், சுகாதார சங்கத்தாரின் அக்கிராசனரால் இச்சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்படுவதற்கு இடமானதாகும்.

6. (*a*) சேட்டிவிக்கேற் பத்திரந் கொடாது விடப்பட்ட அல்லது,

(*b*) அப்பத்திரத்தில் எழுதியுள்ள நிபந்தனை யொன்று நிறைவேற்றப் படாததினால் சேட்டிவிக்கேற் பத்திரம் அழிததுவிடப்பட்ட ஆண் அல்லது பெண் நாயை வைத்திருப்பவர் அறிவித்தலில் குறிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அந்த நாயைக் கொண்டுவந்து சுகாதார சங்கத்தாரால் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தரிடம் ஒப்புவித்தல் வேண்டும். அக்கிராசனர் அந்த நாய்களின் விஷயததில் எனன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறரோ அவ்வண்ணமே செய்தல் வேண்டும்.

போம் A.

நாய்களைக் குறித்த உபவிதிகளின்படி எழுதிக்கொடுக்கவேண்டிய விவரப்பத்திரம் :—

வீட்டிலக்கம் :————.

தெரு :————.

வீட்டுக்காரனுடைய பெயர் :————.

| வீட்டிலுள்ள நாய்களின் தொகை | விவரம் | | | | | | சொந்தக்காரன் பெயர் | பணங்கட்டிய திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | கழுத்தின் அளவு | ஏதும் விசேஷ அடையாளங்கள் | குறிப்பு | | |
| | | | | | | | | |


325——J. N. 59611—141 (9/36)

T 1

அறிவித்தல் ஒப்புவித்த தேதி :————.

முல்லைத்தீவு கச்சேரி,
193 — ம் ஆண்டு ————மீ —— ந் உ.

————

வீட்டுக்காரனுடைய கையொப்பம்.

மேற்சொல்லிய வீட்டுக்காரன் மேலேயுள்ள போர்ம் பத்திரத்தை ஒரு கிழமைக்குள் நிரப்பி அனுப்பும்படி கேட்கப்படுகிறுர் அப்படிச் செய்யத் தவறும் எவரும் ரூபாய் 20 தெண்டம் இறுப்பதற்குப் பாத்திரர் ஆவார்.

————

அக்கிராசனர்.

முல்லைத்தீவு கச்சேரி,
193 — ம் ஆண்டு ———— மீ —— ந் உ.

போர்ம் B.

நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய சேட்டிவிக்கேற் பத்திரம் பதியப்பட்ட இலக்கம் :————.
தெரு :————.

———— இலக்க வீட்டிலிருக்கும் ———— என்பவர் கீழே விவரிக்கப்பட்டிருக்கும் மாதிரியான ஒரு ஆண்/பெண் நாயை இன்று இந்தக் கந்தோரிற் பதிவுசெய்திருக்கிறுர் என்றும் அதற்காக சதம் ———— பதிவுப் பணமாய்க் கட்டப்பட்டிருக்கின்றதென்றும் இதனுல் உறுதிப்படுத்தப்படுகின்றது.

நாயின் விவரம்.

சாதி :————.
ஆணே பெண்ணே :————.
நிறம் :————.
கழுத்தின் அளவு :————.
எதும் விசேஷ அடையாளம் :————.

இந்த சேட்டிவிக்கேற் பத்திரம் 193 — ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதி வரைக்கும் பெலப்புடையதாயிருக்கும்.

————

அக்கிராசனர்.

முல்லைத்தீவு கச்சேரி,
193 — ம் ஆண்டு ———— மீ —— ந் உ.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினுல் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிதின் ஏற்பாடுகளின் கீழ் 1934 ம் ஆண்டு (ஜூன்) ஆனிமீ 22 ந் திகதியின் " கெசெற் " பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்றிருந்த மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் பிரதி காரியஸ்தத்தின்படி ஸ்தல ஸ்தாபன அதிகாரசபையார் பீற்றேர்ஸ் லேனை குறுப்பு ரேட்டுவரைக்கும் திறப்பித்தலாகிய ஓர் பகிரங்க தேள்வைக்கு வேண்டியதான பின்சொல்லப்படும் காணியை எடுத்திக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் :

பிரதமபடத்து இல : A 576. வெலிக்கடை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | குறுப்பு ரேட்டு வரிப்பண இலக்கம் 2 G1 உள்ள காணியின் பகுதி | கல்மதவுகள் இரண்டுள்ள ரேட்டும், புல்லுநில காலஞ்சென்ற மும் சேற்றுநிலத்தின் பகுதியும் | டி. சி. சேனநாயகவின் உரித்தாளிகள் | 0 1 5·80 |

மேற்சொல்லப்பட்ட காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன். மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1936 ம் ஆண்டு (ஒக்ரோபர்) ஐப்பசி மாசம் 24 ந் திகதி, சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்றும் உறுதிகளாலும் பதிவுகொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு நகரசங்கக் கந்தோர்,
1936 ம் ஹூ (செப்ரெம்பர்) புரட்டாதிமீ 29 ந் உ.

டபிள்யூ. எல். மேர்பி,
நகரசங்க சபாநாயகரும், நகராதிகாரியும்.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.